சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 20.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். NC 1393/E/2023 (SA 7220/E/2022)**

திரு.க.குருநாதன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(ஊராட்சிகள்), வட்டார வளர்ச்சி அலுவலகம், துறையூர் ஊராட்சி ஒன்றியம்,
திருச்சி மாவட்டம்- 621 010. -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தின் 27.07.2023 மற்றும் 13.11.2025 தேதியிட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.கே.பெரியசாமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), ஊராட்சி ஒன்றியம், துறையூர் அவர்கள் இவ்வாணையத்தில் 20.01.2026 அன்று நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் 12.01.2026 அன்று துறையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், 13.01.2026 அன்று பகளவாடி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகத்திலும் மனுதாரர் ஆவணங்களை பார்வையிட மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டார வளச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், துறையூர் அவர்களின் ந.க.தி6/4173/2025, நாள் 07.01.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு, மனுதாரர் ஆவணங்களை பார்வையிட சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் ஆஜராகவில்லை என பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல்களை, சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொள்ள மனுதாரருக்கு 07.01.2026 தேதியிட்டு பொது அதிகார அமைப்பிலிருந்து கடிதம் அனுப்பட்டுள்ளதும், மேற்படி கடிதம் மனுதாரருக்கு சார்வு செய்யப்பட்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினையும், பொதுத் தகவல் அலுவலரால் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மனுதாரர் தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட ஆஜராகவில்லை என்ற பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையினை ஆணையம் ஏற்கிறது.

4. இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் நேரில் பார்வையிட்டு, நகல் பெற்றுக்கொள்ள உரிய சந்தர்ப்பம் மனுதாரருக்கு வழங்கப்பட்டும், மனுதாரர் அதனை பயன்படுத்த தவறியுள்ளார். மனுதாரர் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில், ஆவணங்களை பார்வையிட அனும கோரும் பட்சத்தில், அவருக்கு பொது அதிகார அமைப்பு அனுமதி வழங்கலாம் என உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேல்நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை இல்லாத காரணத்தினால் **இவ்வழக்கானது, மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். NC 1393/E/2023 (SA 7220/E/2022)**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
துறையூர் ஊராட்சி ஒன்றியம்,
திருச்சி மாவட்டம்- 621 010.

**மேல்முறையீட்டாளர்**

திரு.க.குருநாதன், த/பெ.கருப்பன்னன்,
எண்.67, பகளவாடி அஞ்சல்,
துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

Copy to: File MP/PA,